மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) கலைஞர் கருணாநிதி நகர்த் திட்டப் பகுதியில் சுமார் 4 கிரவுண்டு, 30 சதுர அடி பரப்புள்ள நிலத்தை அருள்மிகு சக்தி விநாயகர் கோயில் அறக் குழுவுக்கு ஒதுக்குவதென்று மாநில வீட்டு வசதி வாரியம் முடிவெடுத்துள்ளது. அந்த நிலத்தின் விலை, மனை ஒன்றுக்கு ரூ. 6,700 என்ற தோராய வீதத்தில் ரூ 26,834 ஆகிறது. விலையில் 25 சதவீதம் செலுத்தப்படுவதன்மேல் முறையான ஒதுக்கீட்டு ஆணை பிறப்பிக்கப்படும்.

Tap-water facilities in Foreshore Estate

* 269 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state the steps taken to provide tapwater facilities inside the houses in the Foreshore Estate, Madras?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சென்னை பட்டினப்பாக்கத்தில் உள்ள வீடுகளுக்கு வீட்டுக்குள்ளேயே குழாய்த் தண்ணீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: அங்கே கிரவுண்ட் ப்ளோரிலே இருக்கக் கூடிய வீடுகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. பர்ஸ்ட் ப்ளோர், செக்கண்ட் ப்ளோரிலே இருக்கக்கூடியவர்களுக்குத் தண்ணீர் வசதியில்லை. ஆகவே, அதையும் செய்துகொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சில இடங்களிலே குழாய்கள் துருப் பிடித்துவிட்டதாகச் செய்தி வந்தது. அதைப்பற்றி பரிசீலித்துக்கொண்டு இருக்கிறார்கள். அங்கேயுள்ள வீடுகளுக்கு ஓவர்ஹெட் டாங்க் கட்டப்பட்டு வருகிறது ஆகவே, விரைவிலே அந்தக் குறைகள் எல்லாம் நிவர்த்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Ennore Thermal Plant

* 270 *Q.*—THIRU M. SURENDRAN AND THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to commission a fifth unit at the Ennore Thermal Plant; and

(*b*) if so, the details thereof ?

1974 சனவரி 30]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) எண்ணூர் அனல் மின்நிலையத்தில் 110 மெகாவாட் திறன் கொண்ட ஐந்தாவது பிரிவு ஒன்றை நிறுவ திட்ட ஆணைக்குழு, 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இசைவு அளித்தது. இத்திட்டத்திற்கு ரூபாய் 1,775 லட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவு 1975 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த எண்ணூர் அனல் மின்சார நிலையத்திலே சேதம் ஏற்பட்டு அதை ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது, அந்தக் குழு மூன்று மாதங்களுக்குள்ளாக அறிக்கை தரும் என்று சொல்லப்பட்டது. அந்தக் குழு அறிக்கையைத் தந்துவிட்டதா? சட்டமன்றத்தின் முன் அது வைக்கப்படுமா? எப்பொழுது வைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏற்கெனவே கூறியிருக்கிறேன். அடுத்த சட்டசபைக் கூட்டத் தொடரிலே அதனுடைய காப்பி எல்லோருக்கும் அளிக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : இதிலே திட்டத்தட்ட இரண்டு வருஷம் தாமதப்பட்டிருக்கிறது. மின்சார நெருக்கடி அதிகமாக இருப்பதால், அதை உடனடியாக ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சென்ற ஆண்டுதான் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. குறைந்தது அதற்கு 2 ஆண்டுக்காலம் ஆகும் என்று தெரிகிறது. 1975 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வேலைகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. திருச்சி ஹெவி எலக்ட்ரிக்ஸ் லிமிடெட்டிடம் சாதகங்கள் வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அவை வந்தபிறகு தான் மற்ற வேலைகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெள்ளிக் குறியிடாத வினாக்கள்.

Notification of vacancies in Catering Establishments

1. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Employment Exchanges have informed the Catering Establishments to notify their vacancies to the Exchanges; and

(b) if so, the details thereof ?